# மண்டைதீவு முகாம் ஷெல்லுக்கு இளைஞர் பலி!


விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 23 இதழ் 25
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 7-3-1994


(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்து நேற்று யாழ். நகரப் பகுதியை நோக்கி நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் இளைஞர் ஒருவர் பலியானார். ஒருவர் காயமடைந்தார்.

நேற்று நண்பகல் 12-30 மணியளவில் மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்து மூன்று தடவைகள் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில், பண்ணைப் பாலத்தில் மீன் பிடித்துக்கொண்டிருந்த தர்மலிங்கம் ராசன் (16 வயது-கொட்டடி) என்பவர் நெஞ்சு பிளந்த நிலையில் ஸ்தலத்தில் உயிரிழந்துவிட்டார். அதே இடத்தைச் சேர்ந்த ரஞ்சன் (16 வயது) என்பவர் கால் ஒன்று துண்டிக்கப்பட்ட நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில்

(4ம் பக்கம் பார்க்க)

## தமிழ், சிங்கள கைதிகள் நூறு பேர் விடுதலை

(கொழும்பு)

சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 100 சிங்கள-தமிழ் கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்களில் 71 பேர் சிங்களவர். 29 பேர் தமிழர்களாவர். பிந்துனுவெல புனர்வாழ்வு நிலையத்தில் வைத்து இந்த இளைஞர்களுக்குப் போதிய தொழில் திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டதாகப் புனர்வாழ்வு ஆணையாளர் அறிவித்துள்ளார். ஈ-ரி

# ★ "இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் வெளிநாடுகளின் தலையீட்டை அனுமதிக்கப்போவதில்லை!"

## ஜனாதிபதி மீண்டும் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வெளிநாட்டுத்தலையீட்டை தாம் அனுமதிக்கப் போவதில்லை என ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா மீண்டும் அறிவித்துள்ளார்.

இலங்கை அரசுப் படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் நடைபெற்றுவரும் போரை ஒரு முடிவுக்கு கொண்டுவருவது குறித்து, மத்தியஸ்தம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட மன்றம் குழுவொன்று முன்வைத்த யோசனையை விஜயதுங்க நிராகரித்துள்ளார்.

வடக்கு கிழக்கு பிரச்சினை தொடர்பாக வெளிநாட்டு மத்தியஸ்த நடவடிக்கை எதிலும் அரசு அக்கறை காட்ட

(4ம் பக்கம் பார்க்க)

## ★ பேச்சுக்களை ஆரம்பிக்க அரசும் - புலிகளும் ஒருவரை ஒருவர் நம்பவேண்டும் - ஆரியரத்ன பேட்டி

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு அரசும் விடுதலைப் புலிகளும் ஒருவரை ஒருவர் நம்ப வேண்டும். இந்த நம்பிக்கையை ஏற்படுத்த நாம் ஒத்துழைக்க வேண்டும் இவ்வாறு சர்வோதய தலைவர் ஏ. ரி. ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

பி. பி. சி. சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டியிலே அவர் இவ்வாறு கூறினார். அப்பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:

எனது யாழ்ப்பாணப் பயணம் பிரயோசனமாக இருந்தது இந்த சமஷ்டி பற்றி எந்தவிதமான பேச்சுவார்த்தையிலும் ஈடுபடவில்லை. முத

(4-ம் பக்கம் பார்க்க)

## சிங்கள கல்விமான்கள் போரை எதிர்க்கின்றனர்

(கொழும்பு)

சிங்கள மக்கள் மத்தியிலுள்ள கல்விமான்கள் பலரும் யுத்தம் நீடிப்பதை விரும்பவில்லை, தமது கருத்துக்களை சிங்களப் பத்திரிகைகள் மூலமாக தற்போது வெளியிட ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பு பல்கலைக் கழக விரிவுரையாளர் டாக்டர் டி. சில்வா தனிநாட்டு கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்து ராவய பத்திரிகைக்கு பேட்டி ஒன்றை வழங்கியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதையோ தமிழர்களு

(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவ குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை! அமெரிக்கா கண்டனம்

(கொழும்பு)

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் பகுதியிலுள்ள இராணுவ முகாமுக்கு கொண்டுவரப்பட்டு அகதி முகாமிலிருந்து 158 தமிழர்கள் காணாமல் போனதற்கு பொறுப்பானவர்கள் என மனித உரிமைகள் அமைப்பினால் குற்றஞ்சாட்டப்பட்ட

(4ம் பக்கம் பார்க்க)

## மீனவர் தாக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும்

(சென்னை)

தமிழக மீனவர் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதை நிறுத்தும் வகையில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நேற்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஈ-ரி

## வளைகுடாப் போரில் கடமையாற்றியோருக்கு ஐ. நா. பிரிவு இழப்பீடு

(கொழும்பு)

1991ம் ஆண்டு வளைகுடா யுத்தம் நடைபெற்றபோது அந்நாடுகளில் கடமை புரிந்த இலங்கையர் உட்பட பல்வேறு நாட்டவர்களுக்கும் இம்மாத நடுப்பகுதியில் இழப்பீட்டு தொகை வழங்க ஐ. நா. பிரிவு நடவடிக்கை எடுத்து வருவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் வெளிவிவகார அமைச்சில் உள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ. நா. வின் மேற்படி நடவடிக்கை மூலம் ஆயிரக்கணக்கான இலங்கையர் பயன் பெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ஈ-ரி)

## திருமலை தாக்குதல்களினால் புலிகளுக்கு பாதிப்பில்லை

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையில் ராணுவம் மேற்கொண்ட வெலு சுனை ராணுவ நடவடிக்கை வெற்றிகரமாக நடத்தப்பட்டது என அரசு பிரசாரம் மேற்கொண்ட அவ்விடத்து வெற்றிகரமானது அல்ல எனவும் இதனால் விடுதலைப் புலிகளுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் தமிழீழ விடுதலைப்புலிகளின்

(4ம் பக்கம் பார்க்க)

## உதவி வழங்கும் நாடுகள் இலங்கைக்கு உதவ பின்னடிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு உதவிகள் வழங்குவதற்கு உதவி வழங்கும் நாடுகள் தற்போது பின்னடித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசுக்கும் உதவி வழங்கும் இடையேயான உறவு பாதிக்கப்பட்டிருப்பதை அடுத்தே இந்நிலையேற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

உதவி வழங்கும் நாடுகள் உதவி அளிக்காததால் கிங்கி ராங்கொட விமானநிலைய வேலைகள் பாதிப்படைந்துள்ளதாக இறங்கிய அரசு தெரிவித்துள்ளது. -ரி

## கடல் வலய தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்படும்

(கொழும்பு)

கடல்வலய தடைமை இதற்கு வீரைந்து தொடர்பாக அரசாங்கம் அக்கறையோடு செயற்படு வருவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக புனர்வாழ்வு அமைச்சு பாதுகாப்பு அமைச்சு, மீன்பிடி கடல்வள அமைச்சு ஆகியன கூடியாக

(4ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### கோக்கி தேவை

எமது நிறுவனத்திற்கு போண்டா, சூசியம், மட்டன் ரோல், மஸ்கட், மிக்சர் தயாரிப்பதில் அனுபவமுள்ள "கோக்கி" தேவை. சம்பளம் நேரில் பேசிக்கொள்ளலாம். ரவி கோப்பி பார், 324, மணிக்கூட்டுகோபுர வீதி, யாழ்ப்பாணம். (எ-3880)

### 25 வருட அனுபவம்

இருபத்தைந்து வருட அனுபவமுள்ள அனுபவசாலியின் கைவண்ணத்தில் சகல பழைய புதிய சுவர் மணிக்கூடுகள், மேசை மணிக்கூடுகள் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும். ஜுவலர் வாச் அன் றேடியோ கோஸ், 284, ஸ்ரான்லி வீதி (வானவில் கபேயார் அருகாமை) யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (எ-3874)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### உலர் உணவு விநியோகம்

(மானிப்பாய்)

மானிப்பாய் ப. நோ. கூ. சங்கக் கிளைகள் மூலம் மீனவர்களுக்கான உலர் உணவு நிவாரணம் தற்பொழுது வழங்கப்பட்டு வருகின்றது. -71

### வாசகசாலை இயங்குகிறது

(மானிப்பாய்)

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி தற்பொழுது பண்டத்தரிப்பு பிரதான வீதியில் உள்ள தனியார் வீடொன்றில் அமைவிலிருந்து இயங்கி வருகின்றது. -71

### சைக்கிள் திருட்டு

(அரியாலை)

யாழ் நகர வீதியிலுள்ள கள்ளுத்தவறணை ஒன்றில் இரவு வேளையில் தினமும் சைக்கிள் திருட்டு நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 5ம் திகதியும் க. சலமோன் என்பவருடைய சைக்கிள் திருடப்போயுள்ளது. (59)

### திருட்டு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு சண்டிலிப்பாய் வீதியில் இடம்பெயர்ந்த ஒருவருக்கு சொந்தமான கடையொன்றின் கூரை பிரிக்கப்பட்டு அங்கிருந்த மரத்தளபாடங்கள் யாவும் இரவு வேளையில் திருடப்பட்டுள்ளது. (72)

### முதலுதவி பயிற்சி

(யாழ்ப்பாணம்)

விசேட முதலுதவிப் பயிற்சியும் நோயாளர் பராமரிப்புப்பயிற்சி நெறியை யாழ். மாவட்ட சாரணர் சங்கம் நடாத்தவுள்ளது. இதில் அக்கறையுள்ள அனைவரும் பங்கு பற்றலாம். இலவசமாக நடைபெறும் இப்பயிற்சிநெறியில் பங்குபற்ற விரும்புவோர் தமது விண்ணப்பங்களை இம்மாத 15-ம் திகதிக்கு முன்னர் திரு. இ. மகேந்திரன் மாவட்ட ஆணையாளர் அதிபர் - கொக்குவில் இந்துக் கல்லூரி கொக்குவில் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

---

## யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க திருச்சபையின் மேய்ப்புப்பணி

# மகாநாடு

### 26. சிறப்பு விருந்தினர் என்று யார் வருகிறார்கள் என்று சொல்ல முடியுமா?

எமது முன்னாள் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள், தென் இந்திய திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை, அங்கிலிக்கன் திருச்சபை பிரதிநிதிகள், ஆயர்களான ஜெபநேசன் ஆண்டகை, அம்பலவாணர் ஆண்டகை ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

### 27. யாழ்ப்பாணத்திற்கு வெளியே இருந்து யாரும் வருகிறார்களா?

போக்குவரத்து நிலைமைகள் கடினம் என்றபடியால் நிச்சயமாக யார் வருகிறார்கள் என்று சொல்வது கடினம். எமது சகோதர மறை மாவட்டமான மன்னார் மறைமாவட்ட ஆயர் ஜோசவ் ஆண்டகை அவர்களும் மற்ற மறை மாவட்ட பிரதிநிதிகளும் வருவார்கள்.

### 28. இந்த மகாநாட்டு நாட்களில் என்ன நடக்கும் என்ற ஓர் கேள்வியை நாம் கேட்கலாமா?

கேட்கலாம். முதல் நாள் அங்குரார்ப்பண வைபவம் நடைபெறும். நிரந்தரப் பிரதிநிதிகள் தங்களைப் பதிவு செய்தபின் 3 30 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

5 மணிக்கு ஒன்றுகூடல் அறிமுகம்செய்தல் ஆகியவற்றுடன் முதலாவது அமர்வு இடம்பெறும்.

ஒவ்வொரு நாள் நிகழ்வுகளும் 7-30 மணிக்கு நாம் பிரதிநிதிகள் தம்மைப் பதிவு செய்வதோடும், செப வழிபாட்டோடும் ஆரம்பமாகும்.

மாலை 7-00 மணிக்கு திருமறைக் கலாமன்றத்தின் பங்குத் தளங்கப்பு நாடகங்கள், திருமறைக் கலாமன்றத் தயாரிப்பு "புதுப்புனல்" நிகழ்வுகள் என்பவற்றுடன் முடிவடையும்.

அமர்வுகள், நாளுக்கு 5 என்ற வகையில் இடம் பெறும்.

### 29. அமர்வுகளில் என்ன நடக்க இருக்கிறது?

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட நிலைப்பாட்டு ஏடுகள் வாசிக்கப்பெற்று, அபிப்பிராயங்கள் பெறப்பட்டு, முடிவுகள் எடுக்கவேண்டிய இடங்களில் வாக்கெடுப்பு நடாத்தப்படும்.

### 30. வாக்கெடுப்பின் மூலம் இந்த விடயங்களிலும் முடிவுகள் எடுக்கப்படலாமா?

மிகவும் குறுகிய காலத்தில் உச்ச பயனைப் பெறுவதற்கும், வீண் நேர விரயங்களை தவிர்ப்பதற்காகவுமே ஒரு உயர்மட்டக் குழுவினர் ஒன்றாக அமர்ந்து இந்த நிலைப்பாட்டு ஏடுகளைத் தயாரித்துள்ளனர். முடிவுகள் எடுக்கப்படவேண்டிய நேரத்தில் ஜனநாயக முறையில் வாக்கெடுப்பு நடத்தி முடிவுகள் எடுக்கப்படும்.

### 31. நிலைப்பாட்டு ஏடுகளில் உள்ள விடயங்கள் என்னஎன்பது இரகசியமானதா?

அப்படி இரகசியமா ஒன்றுமில்லை.

(1) தன்னைப் புதுப்பித்து பகிர்ந்தளிக்கும் திருச்சபையை நோக்கி (2) எம்மைப்பற்றிய புதிய நோக்கும், எம்மை நோக்கிய புதிய பணியும். (3) நாம் இன்றைய உலகின் இறைமக்கள். (4) சீடத்துவமும்—அருங்கொடைகளும். (5) குருக்கள், துறவிகளின் வாழ்வும் பணியும். (6) பொது நிலையினரின் அழைப்பு (7) நாம் கடவுளின் மீட்புப் பணியை மக்களுக்கு வழங்கும்அமைப்பு. (8) ஆலயத் திருச்சபைகளும், குழு வாழ்வும் பங்கு அமைப்பும். (9) உலகிற்குப் பணிபுரியும் திருச்சபையின் நிறுவனங்கள் என்ற தலைப்புகளில்தான் நிலைப்பாட்டு ஏடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 32. இந்த அமர்வுகள் எல்லாம் யாழ்.ஆயர் அவர்கள் தலைமையில்தானா இடம்பெறும்?

யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் தலைமையிலும் வழிகாட்டுதலிலும்தான் இம் மகாநாடே நடத்தப்படுகின்றது. ஆனால் எல்லா அமர்வுகளுக்கும் ஆயர் அவர்களே அவைத் தலைவராக இல்லாமல் மற்றைய குருக்கள், பொதுநிலையினரையும் அவைத்தலைவர்களாக அமரும்படி ஆயர் அவர்கள் அழைத்துள்ளார்கள்.

### 33. பொது நிலையினரும் அவைத் தலைவர்களாக அமர்கிறார்களா?

நிச்சயமாக அமர்கிறார்கள். முதலாவது அமர்வுக்கு ஆயர் அவர்கள் அவைத் தலைவராக அமர்ந்த பின்னர் 8 குருக்கள் அவைத்தலைவர்களாக அமர்வார்கள்; ஒரு அருட்சகோதரியும், 4 பொது நிலையினரும் அவைத்தலைவர்களாக அமருவார்கள். திரு A. S. அகஸ்ரின், செல்வி எமிலியா யோசேப்பின், திரு. S. F. சவுந்தரம், திரு. ஜெயநாதன் ஆகியவர்களே அந்த நான்கு பொதுநிலையினரும்.

---

# பல பகுதியிலும் சிறுதானிய செய்கை

(உடுவில்)

கடந்த மாரி காலத்தின் போது பரவலாகக் கிடைத்த பெருமழையினால் ஏற்பட்ட வயல் ஈரத்தை பயன்படுத்தி அநேகமான விவசாயிகள் நெல் அறுவடையின் பின்னர் மறுவகைப் பயிர்களை பயிரிட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளிலுள்ள வயல்களில் நெல்அறுவடை முடிவடையும் காலம் நிலவிவருகின்றது. நெல் அறுவடை செய்த வயல்களில் தற்போதுள்ள ஈரப்பதன் உழுந்துச் செய்கைக்கு ஏற்றதாக அமைந்துள்ளது.

நெற்செய்கையிலீடுபட்ட பல விவசாயிகள் அறுவடையின் பின்னர் பயறு, உழுந்து, எள்ளு போன்ற சிறுதானியப் பயிர்களையும் சணலையும் பயிரிட்டு வருகின்றனர்.

கட்டாக்காலி மாடுகளின் தொல்லைகளைக் கட்டுப்படுத்துவதற்கு சில இடங்களில் கூட்டுக் கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன. (109)

# புதிதாக 52 பேருக்கு தொழுநோய் கண்டுபிடிப்பு

(பண்டத்தரிப்பு)

1993ம் ஆண்டின் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தொழுநோய் பரிசோதனைகளின் போது 52 புதிய தொழுநோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

தற்போது யாழ் மாவட்டத்திலுள்ள பல்வேறு சிகிச்சை நிலையங்களிலும் மொத்தம் 137 பேர் தொழுநோய்க்கான சிகிச்சையைப் பெற்று வருவதாக யாழ் பிரதேச தொழுநோய்த் தடுப்பு உத்தியோகத்தர் திரு எம். குணரத்தினம் தெரிவித்தார்.

மானிப்பாய் சுகாதாரவைத்திய அதிகாரி பிரிவில் 57 பேருக்கும், கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 26 பேருக்கும், யாழ் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரிபிரிவில் 22பேருக்கும், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 16 பேருக்கும், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 22 பேருக்கும், ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 16 பேருக்கும், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 7 பேருக்கும், கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 5 பேருக்கும் தொழுநோய்க்கான சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. (72)

# ஸ்கந்தபுரத்தில் கால்நடை முதலுதவிசிகிச்சை நிலையம்

(யாழ்ப்பாணம்)

அக்கராயன் கிராமத்தில் ஸ்கந்தபுரம் பகுதியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் கால்நடை முதலுதவிச் சிகிச்சை நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. 15,000 திற்கும் அதிகமான கால்நடைகள் உள்ள இப்பிரதேசத்தில் கால்நடைகளுக்கு உகந்த பராமரிப்பின்றியும் ஆலோசனை வசதிகளின்றியும் கால்நடை வளர்ப்பாளர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வந்தமை இதனால் நீக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வாரத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் கால்நடைப் போதனாசிரியரும், மாதத்தில் 1-ம், 2-ம் திகதிகளில் மாவட்ட மிருக வைத்தியரும் ஆலோசனைகளும், சிகிச்சைகளும் வழங்கி வருகின்றனர்.

இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோழிகளுக்கும், 250 க்கு மேற்பட்ட கால்நடைகளுக்கும் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. அத்துடன் இந்நிலையத்தினூடாக இறைச்சிப் பரிசோதனை நட

(4ம் பக்கம் பார்க்க)

---

### 34. இம்மகாநாடு பாரிய மாற்றங்களைக் கொண்டு வருமா?

பாரிய மாற்றங்களை உடனடியாகக் கொண்டு வருவதல்ல மாநாட்டின் நோக்கம். எம்மைப் புதுப்பித்தல் பகிர்ந்துவாழும் அன்புச்சமூகமாக மாறுவதும் உண்மையாகவே மாற்றங்கள் தேவைப்படுமிடத்து தூய ஆவியின் துணையோடு அவற்றைக் கொண்டு வருவதுமே நோக்கமாகும்.

### 35. மகாநாடு வெற்றியளிக்குமா?

என்ன இப்படிக் கேட்டுவிட்டீர்கள். இன்றைய காலத்தில் இவ்வாறு ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த எமது வளர்ச்சிப் பாதையில் ஓர் முக்கிய மைல்கல்லான இம் மாநாட்டைக் கூட்டுவதே ஒரு பெரு வெற்றிதானே. இந்த மகாநாட்டு நாட்கள் மட்டும் வெற்றியைத்தரும் என்று எதிர்பார்ப்பது தவறு. நாம் ஏற்கனவே வெற்றி பெற்றுவிட்டோம்; மகாநாட்டின் பின்னரும் எம்மைப் புதுப்பித்து, வெற்றிநடை போட்டுக் கொண்டே இருப்போம்.

தந்த விளக்கங்கள் அனைத்திற்கும் அன்பான நன்றிகளும் மகாநாட்டிற்கு எமது வாழ்த்துக்களும்

---

அன்பளிப்பு:

வ. அ. எட்மன் குடும்பம் - ஜேர்மனி

டாக்டர் A.L. ஏபிரகாம், பிலிப்ஸ் நேசிங்கோம்

றேடியோ மனுவல் ஸ்தாபனத்தினர்

---

பொதுமக்கள் தொடர்புக் குழு

மேய்ப்புப்பணி மகாநாடு

(கி-853)

